9th November 1966]

கனம் திரு. வெ. ராமையா: இந்தக் கமிட்டியினுடைய வேலை 'ட்ராபிக் சர்வே' செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியதுதான். இது நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான திட்டம் ஆகையால், இந்த ட்ராபிக் சர்வே வேலை மிக விரைவில் முடியும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: இந்திய சர்க்கார் அமைத்த இங்லண்டு வாட்டர்வேஸ் கமிஷன் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்கு முன்பே இந்த இடங்களையெல்லாம் எப்படித் திருத்தியமைப்பது என்று ரிபோர்ட் தந்திருக்கிறது. அதை மாநிலக் கமிட்டி ஆராயப் போகிறதா? அல்லது அந்த ரிப்போர்ட்டைத் தூக்கியெறிந்துவிட்டு, புதிதாக யோசனை தெரிவிப்பதற்காக இந்தக் கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா: மத்திய சர்க்கார் கமிட்டி ஒன்றும் கிடையாது. நம்முடைய அரசாங்க உயர்தரக் கமிட்டி வேலை செய்கிறது. வேலையை எடுத்துக்கொள்வதற்கான எஸ்டிமேட் எல்லாம் தயார் செய்திருக்கிறது. அது பெருந்தொகையாக இருக்கிறது. ஆரம்பத்தில் 655 லட்சம் ரூபாய், பிறகு 355 லட்சம் ரூபாய். இந்த அளவு பெருந்தொகையில் ஏற்பாடு செய்யும்போது, அதில் போக்குவரத்து கட்டுபடியாகுமா என்றெல்லாம் பார்க்க வேண்டும். அந்தத் திட்டத்தைக் குறித்து ஒன்றும் பரிசீலனை இல்லை. ட்ராபிக் சர்வே தான் செய்யப்பட்டது.

திரு. இராம. அரங்கண்ணல்: பக்கிங்காம் கால்வாய், கூவம் நதி இரண்டையும் ஒரு கோடி அல்லது ஒன்றரைக் கோடி ரூபாயில் சீர்திருத்திவிடலாம் என்று தெரிவித்த யோசனை இப்பொழுது எப்படி இருக்கிறது?

கனம் திரு. வெ. ராமையா: ட்ராபிக் சர்வே நடந்துகொண்டிருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து: இந்தக் கமிட்டி விரைவில் தன்னுடைய வேலையை முடிக்கும் என்று கூறுகிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதை எடுத்துக்கொள்ளுவதற்கு உத்தேசிப்பதாகவும் கூறுகிறார்கள். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைக் குறித்த இறுதி முடிவு இன்னும் ஒரு வாரத்தில் செய்யப்பட இருக்கிறது. ஆகவே, அதற்கு முன்னால் இந்தக் கமிட்டி தன்னுடைய வேலையை முடிக்குமா?

கனம் திரு. வெ. ராமையா: என்னிடம் இருக்கும் விவரம் அதற்கு முன்னதாக முடியும் என்பது.

நிலவரி தள்ளுபடி

***556 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி:** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் தாலுகா, நாகவேடு கிராம ரயத்துக்கள் நிலவரி தள்ளுபடி சம்பந்தமாக 10—1—1966 அன்று அரசாங்கத்திற்கு முறையீடு ஏதேனும் அனுப்பியுள்ளார்களா?

(இ) ஆம் எனில், அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) ஆம்.

(இ) நாகவேடு கிராமத்தில் 640.77 ஏக்கரா பரப்பளவுள்ள நன்செய் நிலங்களுக்கு 3,174.47 ரூபாய் அளவில் பருவகாலத் தீர்வைத் தள்ளுபடி அளிக்கப்பட்டுள்ளது.

புறம்போக்கு நிலங்கள்

***557 கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தென்னார்க்காடு மாவட்டம், வானூர் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குட்பட்ட பூத்துறை, திருச்சிற்றம்பலம், இரும்பை முதலான பஞ்சாயத்துக்களுக்கு ஒப்படைக்கப்பட்ட புறம்போக்கு நிலங்களைத் தனி நபர்களுக்கோ, மற்றும் பாண்டிச்சேரி மாநிலத்தைச் சேர்ந்த அரவிந்து ஆசிரமத்திற்கோ அதன் கிளை ஸ்தாபனங்களுக்கோ பட்டா மாற்றம் செய்து கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. வெ. ராமைய்யா : (அ) புதுச்சேரி ஸ்ரீ அரவிந்தர் சங்கம் "அரோவில்லே" என்னும் நகரை அமைப்பதற்காக, தென் ஆர்க்காடு மாவட்டம், திண்டிவனம் தாலூகாவில், பூத்துறை கிராமத்தில் உள்ள தீர்வை விதிக்கப்படாத 41 ஏக்கர் தரிசு நிலங்களுடன் திருச்சிற்றம்பலம், இரும்பை, பாட்டனூர் கிராமங்களில் உள்ள 219.76 ஏக்கர் நிலங்களையும் பட்டா செய்து தருமாறு வேண்டியுள்ளது. இந்த நிலங்களைப் பட்டாசெய்து தரும்படி வேறு எவரிடமிருந்தும் விண்ணப்பம் எதுவும் வரவில்லை.

(இ) இது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : ஒரு தடவை பஞ்சாயத்துக்கு ஒப்படைக்கப்பட்டுவிட்ட புறம்போக்கு நிலங்களை சர்க்காரேகூட எடுத்துக்கொள்ளுவதற்குச் சட்டத்தில் இடம் இல்லை என்று பஞ்சாயத்து ஆக்ட்டிலே இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால், பஞ்சாயத்துக்கு ஒப்படைக்கப்பட்ட நிலங்களை மறுபடியும் தனி நபருக்குப் பட்டா செய்துகொடுக்கவேண்டுமென்ற யோசனை வந்து, அதற்கு எதிராகப் பஞ்சாயத்து தீர்மானம் போட்டிருந்தும், தனி நபருக்குப் பட்டா செய்துகொடுப்பதற்கான காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமைய்யா : பஞ்சாயத்து ஆக்ட் பற்றி கேட்ட விவரத்திற்கு நான் பதில் சொல்ல முடியவில்லை. இப்பொழுது ஆசிரமத்தினுடைய டவுன்ஷிப் அமைப்பதற்காக அவர்கள் கேட்டிருக்கிறார்கள். பஞ்சாயத்து தீர்மானம் போட்டிருக்கிறது. கனம் அங்கத்தினரும் ஆட்சேபணை சொல்லுகிறார்கள். இதெல்லாம் பரிசீலனையில் இருந்து வருகிறது.